பக்கங்கள் 17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 29 புதன்கிழமை 14.08.2024 | அதிர்வு 012

## ஜயதிஸ்ஸ ரணவீரவும் ஜனாதிபதிக்கு ஆதரவு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தனது ஆதரவை வழங்க முன்னாள் அமைச்சர் ஜயதிஸ்ஸ ரணவீர தீர்மானித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற 05▶



# ரணிலின் பெரு வெற்றிக்காக நான் அயராது பாடுபடுவேன்!

## ராஜித சேனாரத்ன நேற்று சபதம்





“ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் பெரு வெற்றிக்காக என்னை முழுமையாக அர்ப்பணிப்பேன். அவரின் வெற்றிக்காகஓயாதுஉழைப்பேன்.செப்டெம்பர்21ஆம் திகதி அவரை ஜனாதிபதியாக்கிவிட்டே ஓய்வெடுக்கச் செல்வேன்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன நேற்று அறிவித்தார். 04▶

# நேற்று வரை 36 பேர் போட்டியிட தீர்மானம்

## கட்டுப்பணம் செலுத்தல் இன்றுடன் நிறைவு




வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நேற்று வரை 36 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு கடந்த மாதம் 26 ஆம் திகதி வெளியான 05▶



நாகப்பட்டினம் – காங்கேசன் துறை இடையிலான பயணிகள் கப்பல் சேவை சில இழுபறிகளுக்கு பின்னர் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் அடுத்த நாள் சனிக்கிழமையும் ஒருவழிப் பயணம் மட்டும் இடம் பெறும். அதற்கு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை முதல் தினசரி நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறைக்கு வரும் ‘சிவகங்கை’ கப்பல் அன்றன்றே மாலையில் நாகப்பட்டினம் திரும்பிவிடும்.

இதுகுறித்த விவரங்களை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாடு நேற்று மாலை நாகப்பட்டினம் துறைமுக வளாகத்தில் இடம்பெற்றது.

அதன்படி –

நாளை மறுதினம் 05▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# பொதுஜன பெரமுனவின் அதிகாரத்தைப் பிடிப்போம்

## எஸ்.எம்.சந்திரசேன கூறுகின்றார்

"ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிகாரத்தை கைப்பற்றுவோம். பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம்."

– இவ்வாறு ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பொதுஜன பெரமுனவின் அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்று குறிப்பிட்டதில் எவ்வித தவறும் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்பதை மீண்டும் குறிப்பிடுவேன். பொதுஜன பெரமுனவை நாங்கள் தான் உருவாக்கினோம்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஜனாதிபதி பக்கம் கட்சியின் பெயர் பலகையை மாத்திரம் வைத்திருப்பதில் எவ்வித பயனுமில்லை. கட்சியின் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்படும். இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் கூட்டணி ஊடாகவே போட்டியிடுவோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையில் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை எதிர் வரும் 17 ஆம் திகதி அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நடத்துவோம். எமது ஆதரவு இல்லாமல் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு அரசியல் கூட்டங்களை நடத்த முடியாது.

பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்கள். நாட்டு மக்களும் இதே நிலைப்பாட்டில் தான் உள்ளார்கள்.

ஆகவே மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய செயற்படுமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்துகிறோம்."– என்றார்.

# கிளி., யாழ். ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டங்கள் 27 ஆம், 28 ஆம் திகதிகளில்!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மற்றும யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டங்கள் எதிர் வரும் 27ஆம், 28 ஆம் திகதிகளில் இணைத் தலைவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 திகதியும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 28 ஆம் திகதியும் மாவட்டச் செயலக கேட்போர் கூடங்களில் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்எஸ்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசணையுடன்தான் அவற்றை மாவட்ட பதில் அரச அதிபர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டத்தில் எந்தவொரு வேட்பாளருக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ பிரஸ்தாபிக்க முடியாது என்ற நிபந்தனையுடன் கூட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் தமிழர் தெருவிழா

## மார்க்கம் வீதியை ஆகஸ்ட் 24, 25 இல் அலங்கரிக்கும்




கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் நிகழும் உலகின் மிகப்பிரம்மாண்ட தமிழர் தெருத் திருவிழாவான தமிழர் தெருவிழா இந்த ஆண்டு ஒரு தசாப்தகால கொண்டாட்டமாக மார்க்கம் வீதியை இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் அலங்கரிக்கவுள்ளது.

2015இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கொண்டாட்டம் காலப்போக்கில் தமிழர்களின் தனி அடையாளமாகவே மாறிப்போனது.

கடந்த ஆண்டு வரலாறு காணாத மக்கள் கூட்டத்தால் நிறைந்த தமிழர் தெருவிழாவில் அண்ணளவாக 2 இலட்சத்து 75 ஆயிரம் பேர் ஆர்வமாகக் கலந்துகொண்டனர். இந்த ஆண்டு தமிழர் தெருவிழா 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்களை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொழி சார்ந்த பெருமையும் தனித்துவமும் உலகின் மிக நீண்ட கால கலை பண்பாட்டு நாகரிக வரலாறும் கொண்ட எம்மவர்களின் கலை, கலாசாரம் உணவுப்பழக்கங்களை ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டில் உள்ள அனைவரும் அறியும் வண்ணம் ஊர் கூடி கொண்டாடும் இந்தத் தமிழர் தெருவிழாவில் ஒவ்வொரு ஆண்டும் புதுமையான சிறப்பான பல அம்சங்கள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் பத்தாவது ஆண்டாக நிகழவிருக்கும் இவ்வாண்டு கொண்டாட்டத்தில் நம்மவர் பெருமை கூறும் பல அம்சங்கள் இடம்பெறவுள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது தாயகத்தில் உள்ள எமது உறவுகளின் சிறுதொழில் உற்பத்திகளை ஊக்குவிக்கவும் சந்தைப்படுத்த உதவவும் என ஒரு காட்சியரை உருவாக்கப்படவுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு பிராந்தியங்கள் சிறுதொழில் உற்பத்திகளில் சிறந்த உற்பத்தியாளர்களைக்கொண்ட வளம்மிக்க பிராந்தியங்கள் என்றாலும் யுத்தத்தின் பின்னர் அவர்களின் உற்பத்தி திறனிலும் சந்தைப்படுத்தலிலும் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த உற்பத்திப்பொருட்களை சர்வதேச சந்தையில் எடுத்துச்செல்லும் முகமாக இலங்கையில் வடக்கு தொழில்துறை சம்மேளனத்துடன் இணைந்து இந்த உள்ளூர் உற்பத்திகள் காட்சியறையை தமிழர் திருவிழாவில் உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதன்போது வடக்கு தொழில்துறை சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். ஆரோக்கியமான கூட்டு முயற்சியில் ஈடுபட விரும்புபவர்கள் தமிழர் தெருவிழாவில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழர்களாக நாங்கள் பெருமைப்பட்டுக்கொள்ள பல வரலாற்று நிகழ்வுகள் உண்டு. அவற்றில் பலவற்றை நம் இளைய தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க வேண்டிய கடப்பாடையும் தமிழர் தெருவிழா தன் நிகழ்ச்சிநிரல்களில் ஆண்டாண்டாக தொடர்ந்து வருகின்றது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் கப்பல் கட்டுமானத்தில் சிறந்த இடமாகத் திகழ்ந்தது. நம் முன்னோர்கள் திறமையான கப்பலோடிகள் என்பதோடு அவர்கள் தாமாகவே பாய்மர படகுகளை உருவாக்கினர். இந்தக் கட்டுமான அழகு மேற்கத்தேய கடலோடிகளையும் ஈர்த்தது. இந்த வரலாற்றுக்கு சான்றாக இருக்கும் ஒரு பெயர்தான் அன்னபூரணி அம்மாள் கப்பல். 1937 ஆம் ஆண்டு, ஐந்து வீரத் தமிழ் கடலோடிகள் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்குத் தாம் செய்த பாய்மாரைக்கப்பலில் பயணம் செய்தனர். எந்த நவீன உபகரணங்களும் இல்லாமல், அவர்கள் ஒரு எளிய பாய்மரக் கப்பலில் உலகின் மிக ஆபத்தான அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்தனர். 10 ஆவது ஆண்டு தமிழர் தெருவிழாவில் இந்த அன்னபூரணி அம்மாள் கப்பலின் நெடிய வரலாற்றுப்பயணமும் அதன் 27 வருட கால செயற்பாடுகளும் காட்சியப்படுத்தப்பட உள்ளது. இதில் மிக முக்கியமாக அன்னபூரணி அம்மாள் பாய்மாரைக்கப்பல் மாதிரி ஒன்றும் மக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளது. வரலாறுகளை மறக்கும் எந்த இனமும் தன்னை தகவமைத்துக்கொள்ள முடியாது. நாம் அனைத்து துறைகளிலும் அனைத்து வகையிலும் சிறந்தவர்களாகவே இருந்து இருக்கின்றோம் என்பதை மீண்டும் ஒருமுறை தமிழர் தெருவிழா பறைசாற்றவுள்ளது.

இவற்றை விடவும் இந்த ஆண்டு பின்னணிப்பாடகர் ஸ்ரீனிவாஸ் உட்பட சரிகமபா புகழ் மாதுலானி, ஜீவன், தாயகப் பாடகர் கந்தப்பு ஜெயந்தன் இவர்களோடு கனடிய பாடகர்கள், கலைஞர்கள் என அனைவரையும் உள்ளடக்கிய கலை, இசைக்கொண்டாட்டங்களும் அரங்கேறவுள்ளன.

நம் கலை மிக விரிந்தது. பறை, சிலம்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மி, பொய்க்கால் குதிரை, பரதநாட்டியம், நாட்டுக்கூத்து என ஆரம்பித்து நவீன கலை நடன அம்சங்களும் தமிழர் தெருவிழாவில் இடம்பெறவுள்ளன.

இவைமட்டுமல்லாது கனடாவில் உள்ள தமிழர்களின் வியாபார சாவடிகள், உணவுச்சாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட சாவடிகளையும் இவ்வாண்டு தெருவிழாவில் எதிர்பார்க்க முடியும். குழந்தைகள், இளைஞர்கள் என அனைவரும் மறக்க முடியாத அனுபவத்தைப் பெறுவதற்கான விளையாட்டுத் திடலும் தமிழர் தெருவிழாவில் ஓர் அம்சமாக அமையவுள்ளது.

உலகின் ஆதிக்குடிகளான தமிழர்கள் காதலும், வீரமும், கொண்டாட்டமும் கொண்ட நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டவர்கள். உலகுக்குப் பலவகைகளில் கலையையும் பண்பாட்டையும் கொடுத்தவர்கள். தமிழர் தெருவிழா தமிழர்களின் பெருமையாக இவ்வாண்டும் சிறந்த கோடைகாலகொண்டாட்டமாக இடம்பெறவுள்ளது. நம் மொழி நடந்து வந்த பாதையில் ஒருமுறை நடந்து பார்க்க அனைவரையும் தமிழர் தெருவிழா அழைக்கின்றது.







## ரணிலின் பெரு வெற்றிக்காக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு, ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் உத்தியோகபூர்வ அறிவிப்பில் கையெழுத்திட்ட பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டில் வறுமையை ஒழித்து மக்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கித் தந்துள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் செயற்றிட்டம் சர்வதேச வரவேற்பைப் பெற்றுள்ளது.

இடதுசாரி முகாமைப் பிரதிநிதித்துவப்படுத்தியே நான் அரசியலில் பிரவேசித்தேன். அரசியல் ரீதியாக முக்கிய முடிவுகளை எடுத்தேன். அந்தத் தீர்மானங்கள் அனைத்தும் இந்த நாட்டு மக்களுக்காக எடுக்கப்பட்டவை. சில சமயங்களில் நான் பொலிஸாரினால் தாக்கப்பட்டேன்.

எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பத் தொடர்ந்தும் என்னை அர்ப்பணிப்பேன். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியைப் பெருவெற்றியாக்குவதற்கு மீண்டும் தாய்வீட்டுக்கு வந்து நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றேன்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குப் புதிய பொருளாதாரக் கட்டமைப்புடன் புதிய அரசியல் கட்டமைப்பையும் உருவாக்க வேண்டும். எனவேதான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடத் தீர்மானித்தேன். சமூகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று என்னைப் போலவே தீவிர சிந்தனை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன என்னுடன் இணைந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்." – என்றார்.

நாரஹேன்பிட்டி அபயாராம விகாராதிபதி வணக்கத்துக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர், அமைச்சர் மஹிந்த அமரவீர, நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார, ரவி கருணாநாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலை 10 மணிக்கு நாகப்பட்டினத்தில் இருந்து புறப்படும் சிவகங்கை பயணிகள் கப்பல் பிற்பகலில் காங்கேசதுறையை வந்தடையும். பின்னர் அடுத்த நாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து அது நாகப்பட்டினத்திற்குப் புறப்படும்.

வரும் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து தினசரி நாகப்பட்டினத்தில் இருந்து காலை 8 மணிக்கு புறப்படும் சிவகங்கை காங்கேசன்துறைக்கு நண்பகல் 12 மணிக்கு வந்தடையும். அங்கிருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் கப்பல் மாலை 6 மணிக்கு நாகப்பட்டினத்தைச் சென்றடையும்.

இந்தச் சேவையில் பயணிக்க பயணச்சீட்டு பதிவு செய்யும் இணைய சேவை நேற்று முன்தினம் திங்கள் நள்ளிரவு 12 மணி முதல் – அதாவது செவ்வாய் அதிகாலை முதல் – இயங்கத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் விவரம் திங்களன்று மாலைமுரசிலும் முன் பக்கத்தில் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

அதன்படி திங்கள் நள்ளிரவில் இருந்து இணையம் செயற்பட்டு வருகின்றது. நேற்றுக் கணிசமான எண்ணிக்கையானோர் இந்த பயணத்துக்கப் பதிந்து பயணச்சீட்டுப் பெற்று வருகின்றனர்.

இந்த இணையம் திங்கள் நள்ளிரவில் இருந்து செயல்படத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டபடி அது இயங்கத் தொடங்கி பயணச்சீட்டு பதிவும் இடம்பெறுகையில் யாழ்ப்பாணத்தில் ஓர் ஊடகம் நேற்று செவ்வாய்க்கிழமை அந்த இணையம் இயங்கவில்லை என்றும், அந்தக் கப்பல் சேவை மீண்டும் தாமதம் என்றும் செய்தி வெளியிட்டிருந்தது. ஆசிரியர் தலையங்கம் வரைந்து அந்த பயணிகள் சேவை ஆரம்பிப்பது திரும்பவும் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அடித்துக் கூறி இருந்தது. சேவை நடக்கவிருக்கையில் பயணிகளைக் குழப்பி, அதிருப்தியுற வைக்கும் விதத்தில் இப்படி ஒரு செய்தியையும் ஆசிரியர் தலையங்கத்தையும் ஏன் அந்த ஊடகம் பிரசுரித்தது என்று தேடிப்பார்த்தேன்.

ஊடக 'மாபியா'தான் காரணம் என்பது தெரிந்தது.

இந்தப் பயணிகள் சேவைக்கான பயணச்சீட்டு முகவர் – ஏஜென்டை – தனக்கு வழக்குமாறு அந்த ஊடக நிறுவன முதலாளியான அரசியல் பிஸினஸ்மன் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார். அதற்கு கப்பல் சேவை நடத்துநர்கள் இணங்கவில்லை. அதனால் வந்த காழ்ப்புணர்ச்சியில் கப்பல் சேவைக்கு பதியும் பயணிகளை குழப்பியடிக்க இத்தகைய செய்தி பிழைப்பு என்று தெரியவந்தது.

ஐஸ்கிரீம் ஏஜென்சி தராமைக்காக அந்த ஐஸ் கிரீம் தயாரிப்பு பக்டீரியா செறிந்த அசுத்த நீரில் இடம்பெறுவதாக செய்தி வெளியிட்டு, அந்த ஐஸ்கிரீம் தயாரிப்பு நிறுவனத்திற்கே ஆப்படித்த கைங்கரியம் போன்ற வேலைதான் இது......!

கேட்டால்..... இந்த மாபியா வேலையை ஊடகப் போராளியின் சாதனை என்பார்கள் – வெட்கம் கெட்டவர்கள்..!

அரும்பணிகளுக்கு ஆட்படிப்பது தான் இவர்களின் ஊடக மாபியா அட்டகாசம்.....!




## தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த நபரின் காணொளிக் காட்சிகள் பொலிஸார் வெளியீடு

யாழில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீடுகளுக்குள் புகுந்து தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த நபர் தொடர்பான சீ.சீ.ரீ.வி. காணொளிகளை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தின் நல்லூர், மானிப்பாய், கோப்பாய், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் அண்மைக் காலமாக தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக துவிச் சக்கர வண்டிகளில் வந்து பகலிலும் அதேபோன்று இரவு நேரங்களிலும் முகமூடிகள் கையுறைகள் அணிந்து அடையாளம் காண முடியாதவாறு வீடுகளுக்குள் உட்புகுந்து தொடர் திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கிற நிலையில் அவை தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறானநிலைமையில்சிலதினங்களிற்கு முன்னர் வீடொன்றிற்குள் புகுந்து திருடிய சமயம் பதிவான சிசிரிவி காணொளிகளில் அந்த நபரின் முகமூடி கழன்றிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதனால் குறித்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ள பொலிஸார் அவ்வாறு தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மாணம் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர்.

## நச்சுப் புகையைச் சுவாசித்து இருவர் பரிதாப உயிரிழப்பு!

மாலபே, கஹந்தோட்டையில் உள்ள வீடொன்றில் இரசாயனக் கலவையைத் தயார் செய்ய முயன்ற இருவர் நச்சுப் புகையைச் சுவாசித்து உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

45 மற்றும் 63 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## நேற்று வரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு முதலாவதாக கட்டுப்பணம் செலுத்தினார். இதற்கமைய நேற்று வரை 36 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்ப கட்டப் பணிகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு நிறைவு செய்துள்ளது. இதற்கமைய கட்டுப்பணம் செலுத்தல் இன்று நண்பகலுடன் நிறைவடையவுள்ளது.

வேட்புமனுக்கள் பொறுப்பேற்றலுக்கான பணிகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளதுடன், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளின் பாதுகாப்பு பன்மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு பிரதான அரசியல் கட்சிகள் கூட்டணிகள் அமைக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.எதிர்வரும் வாரம் முதல் பிரதான அரசியல் கட்சிகள் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளன.

## ஜயதிஸ்ஸ ரணவீரவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பின்போது ஜனாதிபதிக்கு இந்தத் தகவல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் பணிமனைகளின் பிரதானி சாகல ரத்நாயக்க, ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன, ருவான் விஜேவர்தன, அகிலவிராஜ் காரியவசம், முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

## கன்னைகள் தெளிவாகும்

இன்றும் நாளையும் இடம்பெறுகின்ற அரசியல் திருவிழாக்களுடன் ஜனாதிபதித் தேர்தல் ஒரு தீர்க்கமான - தெளிவான - கட்டத்தை அடைந்து விடும் என்று எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வோர் அதற்காகக் கட்டுப்பணம் செலுத்துவதற்கான காலம் இன்று நண்பகலுடன் முடிவடைகின்றது.

இதுவரை 36 வேட்பாளர்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

19 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், 16 சுயாதீன வேட்பாளர்கள் மற்றும் வேறு கட்சி சார்பில் ஒருவர் என 36 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

பிரதான வேட்பாளர்கள் அனைவரும் தமது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர். பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்ட நாமல் ராஜபக்ஷ மாத்திரமே இன்னமும் கட்டுப்பணத்தை செலுத்தவில்லை. இன்று அவர் தமது கட்டுப்பணத்தைச் செலுத்த உள்ளார்.

இந்த நிலையில் வாக்குச் சீட்டில் அவர் பெயரில் குழப்பம் ஏற்படுத்தும் விதத்தில் நாமல் ராஜபக்ஷ என்ற பெயரில் சட்டத்தரணி ஒருவரும் இத்தேர்தலில் போட்டியிட உள்ளார் எனக் கூறப்படுகின்றது. இவர் தமது கட்டுப்பணத்தை நேற்றுச் செலுத்தியுள்ளார்.

இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ ஏற்கனவே மெகா அரசியல் கூட்டணி ஒன்றைக் கூட்டியிருக்கின்றார் என்றும், அதில் 27 அரசியல் கட்சிகளும் மேலும் பல பொது அமைப்புகளும் இணைந்திருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

அதேசமயம் இந்தத் தேர்தலில் சுயேச்சையாகக் களமிறங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியினர் இணைந்து புதிய கூட்டணியொன்று - பெரும்பாலும் இன்று - உருவாக்க உள்ளனர் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'பொதுஜன ஐக்கிய முன்னணி' என்ற பெயரில் இந்தக் கூட்டணி உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் எனப் பல தரப்புகள் இந்தக் கட்சியில் அல்லது கூட்டணியில் இணைய உள்ளன. கொழும்பு, பத்தரமுல்லையில் உள்ள வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் இன்று காலை 10.30 மணிக்கு விசேட நிகழ்வொன்று இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ள நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண, துமிந்த திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்ஷன யாப்பா, நளின் பெர்னாண்டோ, ஜோன் சேனவிரத்ன, பிரியங்கர ஜயரத்ன, நிமல் லான்சா, சாமர சம்பத் தசநாயக்க, கோட்டகந்த குணதிலக்க, எஸ்.எம்.நாகத் குணதிலக்க, ஜகதத் குணதிலக்க, எம்.முஷாரப், இஷாக் ரஹ்மான், எஸ்.வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன், நசீர் அஹமட், மொஹமட் முஸம்மில், அலி சப்ரி ரஹீம், உதயண கிரிந்திகொட மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்க உள்ளனர் என்றும் கூறப்பட்டது.

ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனது முடிவை இன்று வெளியிட இருப்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளது. அக்கட்சி பெரும்பாலும் ஜனாதிபதி ரணிலுடன் கைகோர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது

அதேசமயம் பட்டாலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான அமைப்பு சஜித் அணியுடன் இன்று சேரலாம் எனக் கருதப்படுகின்றது.

நாளை வேட்பு மனு தாக்கலோடு அரசியல் களநிலைவரம் பெரும்பாலும் தெளிவாகிவிடும். அரசியல் கட்சிகளின் கன்னைகள் - அணி வகுப்பு - ஒரு சீராகி, தெளிவாக - துலாம்பரமாக - வெளிப்படும் என எதிர்பார்க்கலாம்.

# உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவி

உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

உலக முதலீட்டாளர் மாநாட்டின் தொடர்ச்சியாக தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதிர்வரும் 27ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார். மேலும் அங்கு கூகுள் நிறுவன அதிகாரி உட்பட பல்வேறு தொழில் அதிபர்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் முதலமைச்சர் மு க ஸ்டாலினின் அமெரிக்கா செல்லும் நிலையில் அதற்கு முன்னதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறு இருப்பினும் இது குறித்த உத்தியோக பூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை.



சமீபத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசும்போது, எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு பின்னர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சராகலாம் என்ற கருத்தை வெளிப்படுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லை தாண்டிச் சென்று மீன்பிடிக்கக் கூடாது: மீனவர்களுக்கு இந்திய கடற்படை அறிவுறுத்தல்




இராமேஸ்வரம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிக்கச் செல்லக் கூடாது என இந்திய கடற்படை சார்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து கடந்த ஜூன் 15 இலிருந்து விசைப்படகு மீனவர்கள் கடலுக்குச் சென்று வருகின்றனர்.

இந்த இரண்டு மாதத்தில் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 11 விசைப் படகுகள், 8 நாட்டுப் படகுகள் மொத்தம் 14 படகுகளை கைப்பற்றி அதிலிருந்த 122 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

மேலும், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஜூலை 31 அன்று கடலுக்குச் சென்ற கார்த்திகேயன் என்பவரின் விசைப்படகின் மீது இலங்கை கடற்படை ரோந்துக் கப்பல் மோதியதில் மலைச்சாமி (வயது 59) என்ற மீனவர் மூழ்கி உயிரிழந்தார். ராமச்சந்திரன் (வயது 64) என்ற மீனவர் கடலில் மாயமானார். இதுவரை இவரது நிலை தெரியவில்லை. இப்படி சர்வதேச கடல் எல்லையில் இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில், இராமேஸ்வரத்தில் இந்திய கடற்படையின் சார்பாக மீனவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இராமேஸ்வரம் வேர்கோட்டில் உள்ள தனியார் அரங்கத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமை வகித்தார். இராமேஸ்வரத்தில் உள்ள இந்திய கடற்படை நிலைய கமாண்டர் விஜய்குமார் நார்வால், மீன்வளத்துறை இயக்குநர் பிரபாவதி, கூடுதல் இயக்குநர் அப்துல் காதர் ஜெய்லானி, சுங்கத்துறை எஸ்.பி-யான மகேஷ் குமார் மீனா, இராமேஸ்வரம் டி.எஸ்.பி-யான. உமா தேவி, நகராட்சி தலைவர் நாசர்கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மீனவ பிரதிநிதிகளான போஸ், சகாயம், எமரிட், கார்ல் மார்க்ஸ் உள்பட இராமேஸ்வரம், தனுஷ்கோடி, தங்கச்சிமடம், பாம்பன் பகுதிகளைச் சேர்ந்த விசைப்படகு மற்றும் நாட்டு படகு மீனவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இந்திய கடற்படை சார்பாக கருத்து தெரிவிக்கையில்,

“இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் செல்லும் மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையில் எதுவும் அசம்பாவிதம் நடைபெறாமல் இருப்பதற்காக இந்திய கடல் எல்லையை தாண்டி மீன்பிடிக்க செல்லக்கூடாது. கடலுக்குச் செல்லும் மீனவர்கள் ஆதார் நகல், மீனவர் அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். கடலுக்குச் செல்வதற்கான அனுமதி டோக்கனை கட்டாயம் வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும்” என வலியுறுத்தப்பட்டது.

தொடர்ந்து பேசிய மீனவ சங்க பிரதிநிதிகள்,

“விசைப்படகு மீனவர்கள் பிடித்து வரும் மீன்களுக்கு அரசு உரிய விலை நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டும், இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் மீன் பிடி துறைமுகங்களில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் படகுகளுக்கு ஒரு நாள் (24 மணி நேரம்) அனுமதி சீட்டுக்குப் பதிலாக, தங்கு கடலுக்கான அனுமதிச் சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் எல்லை தாண்டிச் செல்லாமல் இந்திய கடற் பரப்பிற்குள்ளேயே மீன் பிடிக்க ஏதுவாக இருக்கும்” என தெரிவித்தனர்.



# அவசரமாகக் கூடுகின்றது ஐ.நா. பாதுகாப்பு பேரவை

காசாவில் உள்ள பாடசாலை ஒன்றிலிருந்த அகதிகள் முகாம்மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதை அடுத்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவை அவசர கூட்டத்தைக் கூட்டியுள்ளது.

காசாவுக்கு எதிரான போர் ஒக்டோபர் 7ஆம் திகதி தொடங்கிய பின்னர் அங்கு நடைபெறும் 24 ஆவது சிறப்பு அமர்வு இதுவாகும்.

அன்று முதல், கிட்டத்தட்ட 40,000 பேர் மோதல்களால் இறந்துள்ளனர்.

ஐ.நா. பாதுகாப்பு பேரவையால் மோதல்களை நிறுத்த முடியாமல் இருக்கும் நிலையில் காசா மோதலின் விளைவாக 15 ஐ.நா உறுப்பினர்களும் மேலும் பல உதவிப் பணியாளர்களும் தங்கள் உயிரை இழந்துள்ளனர்.



# ஷேக் ஹசீனா மீது கொலைக் குற்றம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன

உள்நாட்டுக் கலவரத்தின் போது நபர் ஒருவர் பொலிஸாரால் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தலைநகர் டாக்காவில் பல வாரங்களாக நிலவிய அமைதியின்மையைத் தொடர்ந்து முந்தைய அரசாங்கத்திலிருந்த மேலும் 6 முக்கிய நபர்களுக்கு எதிராகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் பிரஜையொருவர் தாக்கல் செய்துள்ள வழக்கில், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதியன்று முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் உத்தரவில், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கண்மூடித்தனமாகபொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.




# உக்ரைன் படை முன்னேற்றம் இடம்பெயரும் ரஷ்ய மக்கள்

ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் படைகள் முன்னேறிவரும் நிலையில் அப்பகுதிகளில் இருந்து சுமார் ஒரு லட்சம் மக்கள் வெளியேறியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதற்ற நிலைமையை அடுத்து குர்ஸ்க் பிராந்தியத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிக்கும் மக்களை ரஷ்ய அதிகாரிகள் தொடர்ந்து வெளியேற்றி வருகின்றனர்.

நேற்று காலை, மக்கள் முதன்முறையாக போல்ஷெ சோல்டாட்ஸ்கி மாவட்டத்திலிருந்து வெளியேறத் தொடங்கினர், பிராந்தியத் தலைவர் விளாடிமிர் ஜைட்சேவ், அனைவரும் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் வெளியேறினர் என்றும் திங்கள்கிழமை வரை அவரது பிராந்தியத்தில் வெளியேற்ற கோரிக்கைகள் எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

பெலோவ்ஸ்கி மாவட்டத்தின் தலைவர் நிகோலாய் வோலோபுயேவ், திங்களன்று அருகிலுள்ள பெலோவ்ஸ்கி மாவட்டத்தை விட்டு வெளியேறிய நிலையில், நிலைமை “மிகவும் மோசமானது” என்று விவரித்து, வெளியேற்றும் முயற்சிகளை விரிவுபடுத்தினார்.

திங்களன்று பேசிய குர்ஸ்க் பிராந்தியத்தின் செயல் ஆளுநர் அலெக்ஸி ஸ்மிர்னோவ், சுமார் 121,000 பேர் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டதாகக் கூறினார்.

இதேவேளை உக்ரைன் குர்ஸ்க் பிராந்தியத்தில் “பிரதேசத்தை கைப்பற்றுவதில்” ஆர்வம் காட்டவில்லை, ரஷ்யா சமாதானத்திற்கு ஒப்புக் கொள்ளும்போது அதன் தாக்குதல் நிறுத்தப்படும் என்று உக்ரைன் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.






# பிரபா கணேசன் அணியும் சஜித் பக்கத்தில் இணைவு

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸவுடன் பிரபா கணேசன் தலைமையிலான மனிதநேய மக்கள் கூட்டணி புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

மனிதநேய மக்கள் கூட்டணியில் பதிவு செய்யப்பட்ட 3 கட்சிகள், பதிவு செய்யப்படாத கட்சிகள், சிவில் அமைப்புகள் உள்ளிட்ட 27 அமைப்புகளின் தலைவர்கள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

# மரத்தில் மோதிய ஜீப்!

## சாரதி படுகாயம்

தம்புள்ளை - பக்கமூன வீதியில் 14 ஆவது மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஜீப் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, ஜீப் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.






# 24 மணித்தியாலங்களில் 29 முறைப்பாடுகள் பதிவு

தேர்தல் தொடர்பில் 24 மணித்தியாலங்களில் 29 முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளனஎனதேசியதேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 11 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திலும் ஏனையவை தேசிய தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ மத்திய நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜுலை 31ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 366 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

# இஞ்சி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

இஞ்சி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் மூலம் அடுத்துவரும் 3 மாத காலப்பகுதிக்குள் 3,000 மெட்ரிக் தொன் பச்சை இஞ்சியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாய, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இஞ்சி உற்பத்திக்கான வசதிகளை வழங்கி உள்நாட்டு சந்தையில் இஞ்சியின் சில்லறை விலையைக் குறைப்பதற்கான விலைமட்டத்தை ஆராய்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.






# யாழ். செயலகப் பதிவாளர் திணைக்கள போட்டோப் பிரதி இயந்திரங்கள் பழுது

## பிரதிகளைப் பெற முடியாது மக்கள் பெரும் சிரமத்தில்


(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பதிவாளர் திணைக்களத்தில் போட்டோ பிரதி இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமையால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

பதிவாளர் திணைக்களத்தில் உள்ள போட்டோ பிரதி இயந்திரம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பழுதடைந்துள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாள்களாகப் போட்டோ பிரதி இயந்திரம் பழுதடைந்துள்ளதால் காணிகளுக்கான தோம்பு மற்றும் உறுதிப் பிரதிகளை பெறமுடியாமல் பொதுமக்கள், சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுகள் கூட சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் பல நூற்றுக்கணக்கான பொதுக்களின் நேரம் வீன்விரயமாவதோடு பலர் தங்களுடைய கருமங்களை மேற்கொள்ளமுடியாது உள்ளனர் எனக் கவலைவெளியிட்டுள்ளனர்.

அண்மைய நாள்களாக தொடர்ச்சியாகப் போட்டோ பிரதி இயந்திரம் பழுதடைந்து வருவதால் பல கோப்புகள் தேக்கநிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நீர்க் கட்டணக் குறைப்புக்கு அமைச்சரவையில் அனுமதி

நீர்க் கட்டணத்தை 5.94 வீதத்தால் குறைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மின் கட்டணம் குறைக்கப்பட்டமைக்கு இணையாக நீர்கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வீட்டுப்பாவனை பிரிவிற்கான நீர்க் கட்டணம் 7 வீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

பாடசாலை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கான நீர்க் கட்டணம் 6.3 வீதத்தாலும் அரச வைத்திய சாலைகளுக்கான நீர்க் கட்டணம் 4.5 வீதத்தாலும் குறைக்கப்படவுள்ளன.



# சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு இருபது எம்.பிக்களுக்கு அறிவுறுத்தல்!

இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை தமது வருடாந்த சொத்து விவரங்களை முன்வைக்கவில்லை என லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சொத்து விவரங்களை கூடிய விரைவில் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நாடாளுமன்ற அலுவலகம் தெரிவித்துள்ளது.


இதற்கு முன்னர் 3 தடவைகள் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என நாடாளுமன்றம் கூறியுள்ளது.

சொத்து விவரங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 169 பேர் தமது சொத்து விவரங்களை சபாநாயகர் ஊடாக லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர்களில் இன்னும் இருபது பேர் அவற்றைச் சமர்ப்பிக்கவிலை எனக் கூறப்பட்டது.

எனினும் இதனைப் பின்பற்றாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டின் புதிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் தத்தமது சொத்து விவரங்களை ஜனாதிபதியிடமே சமர்ப்பிக்க வேண்டும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.



# தபால்மூல வாக்களிப்புக்கு 4 நாள்களை ஒதுக்க முடிவு

ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக்காக 04 நாள்களை ஒதுக்க தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

தாபால்மூல வாக்களிப்புக்கான உரிய திகதி தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தின் போது தீர்மானிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது கடந்த 09 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.



# ஓய்வூதியம் பெறுவோருக்கான 3,000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு ஒக்டோபரில்

ஓய்வூதியம் பெறும் மூத்த பிரஜைகளுக்கு 3,000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவை ஒக்டோபர் மாதம் முதல் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் மாதம் வழங்கப்பட வேண்டிய 3,000 ரூபா நிலுவைத் தொகையுடன் ஒக்டோபர் மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவாக 6,000 ரூபா வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்டோபர் மாதத்தின் பின்னர் நவம்பர் மாதம் முதல் இதுவரை வழங்கப்பட்ட 2,500 ரூபா கொடுப்பனவுக்கு மேலதிகமாக புதிதாக செலுத்தப்படும் 3,000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவையும் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறியுள்ளார்.

இந்த 3,000 ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்காக நிதியமைச்சினால் எழுத்துமூலம் பூரண அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சினால் இதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் செப்டெம்பர் மாதத்தில் இதனை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக் குழுவினால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய ஒக்டோபர் மாதத்தில் வழங்கப்படவுள்ள 3,000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் செப்டெம்பர் மாதத்தில் வழங்கப்பட வேண்டிய 3,000 ரூபா நிலுவைத் தொகையுடன் 6000 ரூபா ஓய்வூதியம் பெறுவோருக்கு ஒக்டோபர் மாத ஓய்வூதிய கொடுப்பனவுடன் வழங்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தனமல்வில மாணவி துஷ்பிரயோகம் அதிபர் உட்பட நால்வர் கைதாகினர்



தனமல்வில பாடசாலையொன்றில் கூட்டு துஷ்பிரயோகத்திற்கு உள்ளான மாணவி கல்வி கற்ற பாடசாலை அதிபர், ஒரு ஆசிரியர் மற்றும் 2 ஆசிரியைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி நால்வரும் நேற்று தனமல்வில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவி துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சம்பவம் தொடர்பான விவரங்களை பொலிஸாரிடம் தெரிவிக்காமை மற்றும் அதனை மறைக்க முற்பட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.





# அனுரவை சந்தித்தார் பாலஸ்தீனத் தூதுவர்

இலங்கைக்காக பாலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் சைத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸா நாயக்கவை சந்தித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

பாலஸ்தீனத்தின் காஸாவில் இடம் பெறும் படுகொலைகளுக்கு எதிராக குரல் எழுப்பவும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவளிக்கவும் அனுர குமாரவி னால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கு இதன்போது அவர் நன்றி தெரிவித் துள்ளார்.

இதனிடையே ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதி நிதி டகாபூம் கடோனா உள்ளிட்ட பிரதி நிதிகள் சிலரும் அனுர குமார திஸா நாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடி யுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட அவர்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கவும் தாம் தயாராகவுள்ளனர் என இதன் போது தெரிவித்துள்ளனர்.











# தேர்தல் செயற்பாடுகளுக்காக ரணில் அரச நிதியைப் பயன்படுத்துகின்றார்

## அநுர குமார குற்றச்சாட்டு




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச நிதி மற்றும் அரச நிறுவனங்களைப் பயன்படுத்தி வருகின்றார்.

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பலமிக்கதொரு அணியாக இந்த முறை தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.

எனினும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் கட்சிகளுக்கிடையே மாறி மாறி தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

கட்சிகளுக்கிடையே உறுப்பினர்கள் மாறி மாறி செல்லும் அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச நிதியைப் பயன்படுத்துகின்றார்.

வாக்காளர்களுக்கு கையூட்டல் வழங்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன” – என்றார்.

# நட்சத்திர சின்னத்தில் திலித் போட்டியிடுவார்

## உதய கம்மன்பில தகவல்




”சர்வஜனசக்தியின்ஜனாதிபதிவேட்பாளர் திலித் ஜயவீர நட்சத்திரம் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவுள்ளார். தேசியத்தை முன்னிலைப்படுத்தி வேட்பாளரை களமிறக்கியுள்ளோம். நாட்டின் சுயாதீனத்தைப் பாதுகாக்க வேண்டும்.”

– இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர சார்பில் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் கட்டுப்பணம் செலுத்தினர். இச்சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அநுராத யஹம்பத், நாடாளுமன்ற உறுப்பினர்களான வீரசுமண வீரசிங்க, கெவிந்து குமாரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில குறிப்பிடுகையில் –

“தேசியத்தை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்கியுள்ளோம். 69 லட்ச மக்கள் நாட்டின் இறையாண்மையை கருத்திற் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். ஆனால் அவர் முறையாகச் செயற்படவில்லை. மக்களாணை பலவீனமடைய கூடாது என்பதற்காகவே தொழிலதிபர் திலித் ஜயவீரவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கியுள்ளோம்.

சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக திலித் ஜயவீர நட்சத்திர சின்னத்தில் போட்டியிடுவார். நாட்டின் இறையாண்மையை பாதுகாக்க வேண்டும். ஆகவே தேசியத்தை முன்னிலைப்படுத்தி களமிறக்கியுள்ள வேட்பாளருக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும்.

எதிர்வரும் வாரம் முதல் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவோம். நாட்டின் ஒற்றையாட்சியை முன்னிலைப்படுத்திய தாக எமது செயற்பாடுகள் காணப்படும். பொதுஜன பெரமுன பற்றி பேசுவது பயனற்றது. பொதுஜன பெரமுனவின் முடிவு எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி உறுதிப்படுத்தப்படும்.”– என்றார்.

# மனித பாவனைக்கு உதவாத பெருந்தொகை பருப்பு மீட்பு

மனித பாவனைக்குப் பொருத்தமற்ற சுமார் ஒரு தொன் பருப்பு, நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் – புறக்கோட்டையில் உள்ள களஞ்சியசாலையொன்றில் நேற்று இடம்பெற்ற சோதனையொன்றின்போதே மனித பாவனைக்குப் பொருத்தமற்ற குறித்த பருப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

களஞ்சிய சாலையுடன் தொடர்புடைய வர்த்தகர், பருப்பை மீளப் பதப்படுத்தி சந்தைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருந்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 14.08.2024




உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தைக் குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்கு சுமையாக தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

மூட்டுகள் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். உங்களின் திறமை மூலம் இன்று முன்னேற்றகரமான பலன்கள் காண்பீர்கள். நீண்ட கால திட்டம் அமைக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்பிற்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக சுய முனேற்றப் பாதையில் செல்வீர்கள். இன்று அனைத்துவிதத்திலும் சிறப்பான நாள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.பணியில் உங்கள் கூடுதல் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள் பெறுவீர்கள்.




இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். எனவே அதனை மாற்றி துடிப்புடன் செயல்பட வேண்டும். நேர்மறையான கண்ணோட்டம் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு அனுகூலமாக இருக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று ஏற்படும் அதிக செலவுகள் தவிர்க்க முடியாதது. எனவே செலவுகளை கட்டுபடுத்துங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.முதுகு வலி மற்றும் இருமல் போன்ற பாதிப்புகள் காணப்படும்.




உங்கள் தவறுகளை நீங்கள் திருத்திக்கொள்ள வேண்டும். உங்கள் செயல்களில் கட்டுப்பாடு வேண்டும். உங்கள் செயல்களை முறைப்படுத்தி ஆற்றுவதன் மூலம் இழப்பு ஏற்படாமல் இருக்கும்.

நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நீங்கள் திட்டமிட்டு பணத்தை செலவு செய்ய வேண்டும்.




இன்று துடிப்பான முன்னேற்றகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்களை முன்னேற்றிக் கொள்வதில் முனைவீர்கள். இன்று உங்களுக்கென சிறப்பம்சத்தை உருவாக்குவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். சரியான நேரத்தில் அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். அதன் காரணமாக முன்னேற்றம் அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இருவருக்கிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருப்பீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படுவதால் சிறப்பான நாளாக இருக்கும். இந்தப் பணம் ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.




இன்று சோதனையான நாளாக இருக்கும். எதைப்பற்றியும் கவலையின்றி அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் ஆதாயம் கிடைப்பது கடினம். சிறிய செயல்களை முடிக்க கடுமையான முயற்சி தேவைப்படும். சக பணியாளர்களுடனான உறவு நல்லுறவாக இருக்காது.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இது முற்றிலும் தேவையற்றது. எனவே நட்பான அணுகுமுறையோடு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பொறுப்புகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று முதுகுவலி வாட்டும். பதற்றமும் குழப்பமும் காணப்படும்.




ஆன்மீக விழிப்புணர்வும் ஈடுபாடும் மகிழ்ச்சி அளிக்கும். இன்று அனுபவத்தின் மூலம் பாடம் கற்க நேரலாம்.

பணி வளர்ச்சி சராசரியைவிட சற்று கூடுதலாக இருக்கும். இன்று அதிக பணிகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிபுணர்களின் ஆலோசனை பெறுங்கள்.

உறவுப் பிணைப்பு வலுவற்றதாக இருக்கும். மகிழ்ச்சியாக இருக்க நட்பான அங்குமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதி நிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். அதன் வேகத்தில் நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். எனவே திட்டமிட்டு செயல்படுங்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் பதட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.08.2024

## தனுசு



முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்குத் தள்ளிப் போடுங்கள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உங்கள் உணர்ச்சியுடன் போராடி உங்கள் சுய முன்னேற்றத்துக்கு முயல வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்படும். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் நண்பர் இல்ல விழாவுக்குச் செல்லத் திட்டமிடிருப்பீர்கள். பதற்றமான சூழ்நிலை ஏற்படும் என்பதால் அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். வறுத்த மற்றும் கார உணவுகளை தவிர்த்தல் நல்லது.

## கும்பம்



இன்றைய நாள் உங்களுக்கு சாதக மாக இருக்கும். முக்கிய முடிவுகள் இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். எந்தச் சவால்களை யும் நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். கடின உழைப்பிற்கு ஊக்கத் தொகை கிடைக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிபீர்கள்.

## மகரம்



இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். உங்கள் மகிழ்ச்சி உங்கள் செயல்களில் வெளிப்படும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இன்னும் மகிழ்ச்சியாக இருக்க இயலும்.

உங்கள் தனித்த திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். பணியில் வெற்றி பெற வேண்டுமென்ற உறுதி உங்கள் அணுகு முறையில் காணப்படும்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை உண்மையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை ஏற்படுத்த உங்களுக்கு வளர்ச்சி ஏற்படுத்தும் வகையிலான சேமிப்பு திட்டத்தில் கலந்து கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்



இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சி குறைந்து காணப்படும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ள தால் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்ள வேண்டும். சக பணியாளர்களுடன் கருத்து வேறுமை காணப்படும்.

உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வதன் மூலம் பிரச்சினை ஏற்படலாம். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் மற்றும் அசௌகரியம் காரணமாக இன்று உங்களுக்கு முட்டி வலி பாதிப்பு ஏற்படும்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park